**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.12/2023**
**Prosecution Witness**:8

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முருகன் (PW8 ) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of March 2026** by V.Nivedha Assistant, District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் மாவட்ட குற்ற பதிவேடு கூடத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.07.2022ம் தேதி நான் கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளராக கூடுதல் பொறுப்பு வகித்த காவல் ஆய்வாளர் திரு.ஜீவானந்தம் அவர்கள் முதல் புலன் விசாரணை முடித்து தொடர் புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த சிவகிரி காவல் நிலைய குற்ற எண்.82/2022 ச/பி.279, 304(A) இதச வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.07.2022ம் தேதி இவ்வழக்கின் சம்பவ இடமான சந்தைமேடு, நல்லப்பா மாடர்ன் ரைஸ்மில் அருகில் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் சம்பவ இடமான காவல் ஆய்வாளர் ஜீவானந்தம் அவர்கள் தயார் செய்த பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கண்டுள்ளவாறு அமைந்திருந்ததால் நான் தனியாக பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை.

2. சாட்சிகள் மருதாசலம், திருப்பதி வெங்கடேஷ், திருப்பதி, சசி என்கிற சக்திவேல், அண்ணாதுரை, சுலோச்சனா, கௌரிசங்கர், அசோக்குமார், சக்திவேல், கவிராஜ், ராஜா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்ததில் அவர்கள் அனைவரும் காவல் ஆய்வாளர் ஜீவானந்தம் அவர்கள் விசாரணையில் கூறியவாறே எனது விசாரணையிலும் கூறியதால் நான் தனியாக அவர்கள் வாக்குமூலத்தை பதிவு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:10:59 +0530

செய்யவில்லை. 10.07.2022ம் தேதி விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களான TN 42 F 7627 Hero Passion Pro மோட்டார் சைக்கிள் மற்றும், TN 72 T 2118 ஈச்சர் வண்டி, விபத்து ஏற்படுத்திய எதிரியின் வாகனமான TN 33 AU 7490 லாரி ஆகியவற்றை வாகன தணிக்கை செய்த ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் சிவகுமார் என்பவரை விசாரணை செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் (TN 42 F 7627 Hero Passion Pro மோட்டார் சைக்கிள்) அ.சா.ஆ.4 ஆகவும், (TN 72 T 2118 ஈச்சர் வண்டி) அ.சா.ஆ.5 ஆகவும், (TN 33 AU 7490 லாரி) அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

3. 10.07.2022ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன கிரண் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த கொடுமுடி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் ராஜேஸ்வரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். **பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே பிரிதே பரிசோதனை அலுவல் தலைமை காவலர் 773 பிரகாஷ் மற்றும் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் சண்முகம் அவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.07.2022ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி வேலுச்சாமி மீது ச/பி.279, 304(A) இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.
பிரேத பரிசோதனை அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், ஆகியவற்றை அரசு தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும் பொருட்டு அரசு தரப்பில் கு.வி.மு.ச.294(3) பிரிவின் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சான்று ஆவணமாக குறியீடு செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் வழக்கு கோப்பினை எப்போது விசாரணைக் குஎடுத்துக்கொண்டேன் என்றால் 10.07.2022ம் தேதி எடுத்துக்கொண்டேன். நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:11:06 +0530

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.17 15:11:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர், கொடுமுடி.